**செய்தி வெளியீடு எண்: 12/09/2020** **நாள்: 18.09.2020**

## பத்திரிக்கைச் செய்தி

## திருமங்கலம், வடபழனி மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களில் மின்சார ஸ்கூட்டர் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளுக்கு பல வசதிகளை வழங்குவதன் ஒரு பகுதியாக, 'Howdy Hire Bikes' நிறுவனத்துடன் இணைந்து இரு சக்கர வாடகை மின்சார ஸ்கூட்டர் திட்டத்தை திருமங்கலம், வடபழனி மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வசதியை பயன்படுத்த பயணிகள் தங்களுடைய மொபைல் போனில் 'Howdy Hire Bikes' என்ற செயலியை பதிவிறக்கம் செய்து ஏறும் மற்றும் இறங்கும் இடத்தை தேர்ந்தெடுக்கலாம். அதன் பின்னர் அதில் வரும் கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்தால் உடனடியாக வாகனம் பயணம் செல்லத் தயாராகி விடும். எந்த மையத்திலிருந்தும் ஸ்கூட்டரை எடுத்துச் சென்று, செயலியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த மையத்திலும் வாகனத்தை விட்டுச் செல்லலாம். சென்னைக்குள் ஒவ்வொரு 500 மீட்டர் தொலைவிலும் இந்த மையம் அமைந்திருக்கிறது.

பயணிக்கும் ஒவ்வொரு கிலோமீட்டருக்கு ரூ.3 மற்றும் நிமிடத்திற்கு 10 பைசா மட்டுமே வாடகைக் கட்டணம் செலுத்த வேண்டும். பயணிகள் தங்களது முதல் சவாரியை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். அடுத்த 5 சவாரிகளில் 50% தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

இந்த இரு சக்கர வாகனங்களில் பயணிகளின் பாதுகாப்பிற்காக இரட்டை அடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது;

1. இரு சக்கர வாகனங்களில் பூசப்பட்டுள்ள வண்ணத்தில் வைரஸை எதிர்க்கும் கரைசல் கலந்து பூசப்பட்டுள்ளது.
2. ஒவ்வொரு சவாரிக்கு பிறகும் இரு சக்கர வாகனம் மற்றும் தலைக்கவசங்கள் சுத்தப்படுத்தப்படுகின்றன.

பொதுமக்களிடமிருந்து வரும் வரவேற்பின் அடிப்படையில், இந்த வசதி மேலும் பல சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**